**செய்தி வெளியீடு எண்:495** **நாள்– 29.6.2008**

## சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அலுவலகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.6.2008 அன்று திறந்து வைக்கிறார்

சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள பாலாறு இல்லத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலகத் திறப்பு விழா 30.6.2008 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலகத்தை திறந்து வைக்க உள்ளார்கள். இவ்விழாவில் ஐம்பெருங்குழு, எண்பேராயம் தலைவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களும், துணைத் தலைவர்கள் முனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்களும், முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களும் மற்றும் ஐம்பெருங்குழு உறுப்பினர்கள் முனைவர் ஔவை நடராசன், அறிவியல் தமிழறிஞர் மணவை முஸ்தபா, கவிப்பேரரசு வைரமுத்து, முனைவர் பு.பா. இராச இராசேசுவரி, மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி மற்றும் எண்பேராயம் உறுப்பினர்கள் முனைவர் மா. நன்னன், கவிக்கோ அப்துல் ரகுமான், முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன், கவிஞர் வாலி, கவிஞர் கா. வேழவேந்தன், பேராசிரியர் சாலமன் பாப்பையா, சட்டமன்ற உறுப்பினரும் திறனாய்வாளருமான திரு.து.இரவிக்குமார், பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு மத்திய, மாநில அமைச்சர்கள் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழறிஞர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள். இவ்விழாவில் அனைவரையும் கலந்து கொள்ள ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயம் அழைக்கிறது.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.